மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்.

(அ) பேரவை விதி 33—ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33—ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்''.
என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) அடகு பிடிப்போர் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகு பிடிப்போர் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1993). மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகு பிடிப்போர் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1993)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பான் புரோக்கர் ஆக்ட்டை பொறுத்தவரையிலே பல்வேறு திருத்தங்களைக் கொண்டு வந்து இருக்கின்றார்கள். அந்தப் பணம் அரசாங்கத்தினுடைய பணம் அல்ல. தனி நபர் கொடுக்கிற பணத்திலே அதிகமான சட்டங்களை போட்டால் நிச்சயமாக அவர்கள் பணம் கொடுக்க முன்வரமாட்டார்கள். இன்று கிராமங்களிலே விவசாயிகள்கூட, கோவாபரேடிவ் பேங்கைவிட, நேஷனலைஸ்டு பேங்கைவிட அதிகமாக விரும்பி வாங்குகின்ற இடம் இந்தமாதிரி தனியார் நடத்துகின்ற பான் புரோக்கர்களிடம்தான். அதற்கு நாம் அதிகமான கண்டிஷன் போட்டால் நிச்சயமாக அந்தத் தொழில் நடக்காது என்பதுதான் என்னுடைய கருத்து. நீங்கள் அதிகமான அதிகாரங்களை தாசில்தாருக்குக் கொடுக்கின்றீர்கள்; அதிகமான பணத்தை டெபாசிட் செய்யவும் சொல்கிறீர்கள். ஏற்கெனவே, அவர்களிடம் புரபஷனல் டாக்ஸ் வாங்குகிறீர்கள். மேலும் இந்தமாதிரி கண்டிஷன் போடும்போது நம்முடைய பணம் என்று சொன்னால்—மத்திய மாநில அரசினுடைய பணம் என்று சொன்னால்—அது மக்கள் வரிப் பணம்; ஆனால், தனிப்பட்ட ஒரு மனிதன் கொடுக்கின்ற பணத்தின் மேல் இத்தகைய கஷ்டங்களைத் தாண்டிவிட்டால் நிச்சயமாக அதை தனியார்தான் நடத்துகின்றார்கள்; அவர்கள் நடத்தவில்லை என்று சொன்னால், ஏழை எளிய மக்களுக்கு அன்றாடம் திடீரென்று பணம் தேவைப்பட்டால் நகையை வைத்து பணம் எடுக்கின்ற அந்தத் தொழிலே நசித்துவிடும் என்பதுதான் என்னுடைய கருத்து.

குறிப்பாகச் சொன்னால், எல்லாச் சட்டங்களும் has to be removed .... such as other conditions .... என்று போட்டு இருக்கிறார்கள். போட்டு இருக்கிற கன்டிஷனே கொஞ்சம். இதிலே என்ன கன்டிஷன் இருக்கிறது என்று தெரியவில்லை. இந்தத் தொழிலை வட நாட்டுக்காரர்கள் தான் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் இங்கிலீஷ்லேயும் தமிழிலேயும்தான் எழுதச் சொல்கிறீர்கள். இவர்களை அங்கே ரீஜனல்

@26—10—1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

லாங்குவேஜிலேயே எழுதச் சொல்லி இருக்கலாம். நம் நாட்டில் மலையாளம் படித்தவர்கள் இருக்கிறார்கள்; கன்னடம், தெலுங்கு படித்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். குறிப்பிட்ட படிவத்தை தமிழிலே எழுதுவதில் பிரச்சினை இல்லை. எந்த டிரான்ஷாக்ஷன்ஸும் all transactions must be in English and Tamil என்று சொன்னால் நிச்சயமாக வட மாநிலத்திலே இருந்து இங்கே வந்து தொழில் நடத்துகின்றவர்கள் எல்லாம் ஓடிவிடுவார்கள் போல் இருக்கிறது. இந்த மாதிரி கன்டிஷன் தேவை இல்லை என்று சொல்கிறேன். கஷ்டம் இல்லாமல் அவர்கள் அந்த தொழிலைச் செய்யட்டும். இங்கே இருக்கின்ற தாசில்தார் தான் லைசன்ஸ் இஸ்யூயிங் அத்தாரிட்டி. அவருக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கும்போது, இப்போதே நமக்குத் தெரியும், எப்படி தாசில்தார் லைசன்ஸ் கொடுக்கிறார் என்று. அதை விளக்கமாகச் சொல்ல நான் தயாராக இல்லை. அந்த அளவிலே கணக்குகள் பார்த்து அவர்களுக்கு அதிகாரங்களை கூடுதல் பண்ணினால் நிச்சயமாக இந்த ஆண்டு ஒரு கோடி வசூல் செய்ய சீலிங் பண்ணினால், அதிக அளவில் பான் புரோக்கர்களிடம் கன்டிஷன்களை விதிப்பார். அப்படி வரும்போது அவர்களுடைய பணம் அதிக அளவில் மக்களிடம் செல்ல வாய்ப்பு இல்லை. அதிக கன்டிஷன்களை இம்போஸ் செய்யும்போது தனிப்பட்ட நபர்கள் இந்த தொழிலை விட்டு வேறு தொழிலுக்குப் போய் விடுவார்கள். அவர்கள் அப்படிப் போனால் என்ன செய்ய முடியும்? ஏழை எளிய மக்களுக்கு அன்றாட மருத்துவ செலவுகளுக்கு பணம் இல்லை என்று சொன்னால், அவர்களுக்கு ரூ. 100 அல்லது 200 வேண்டுமென்று சொன்னால் இந்த பான் புரோக்கர்களிடம் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. நேஷனலைஸ்டு பேங்க் மூலம் பல கோடி பணம் கொடுக்கிறோம். ஆனால் அது ஏழைகளுக்கு சரியாகப் போய் கிடைக்கவில்லை. குறிப்பாகச் சொன்னால், சட்டங்களை படிக்காத மக்களுக்கு ஒரு கோவாபரேடிவ் சொசைட்டியிலே லோன் வாங்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் அங்கே 25 இடத்திலே கையெழுத்துப் போட்டு, அப்படியும் 4, 5 மாதம் தாமதம் ஆகிறது. நேஷனலைஸ்டு பேங்குக்கு போனாலும் அதே கதிதான். அங்கே வந்து அவர்கள் வங்கியினுடைய சட்டங்களை பார்த்து கையெழுத்துப் போடும்போது தாமதம் ஆகிவிடுகிறது. அவர்கள் தங்களுடைய மகனுக்கு மருத்துவச் செலவுக்காக 100 ரூபாய் வேண்டுமென்று சொன்னால், அது உடனே அங்கே கிடைக்காது. ஆகையினாலே தான் இந்த பான்புரோக்கர்கள் வட மாநிலத்திலே இருந்து வந்து தமிழகத்திலே அதிகமாக தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலிலே பல கோடி ரூபாய் அவர்கள் சம்பாதிக்கிறார்கள். அதை இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதிகமான கன்டிஷன் நம்முடைய அரசு போடும்போது அந்தத் தொழில் நசித்துவிடும்; மற்றபடி வேறு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அவர்கள் இந்த தொழிலை விட்டால், பணத்தை வேறு தொழிலில் முடக்கி விடுவார்கள். அது நம்முடைய பணம் இல்லை.

1993 அக்டோபர் 28] [திரு. மா. சுந்தரதாஸ்]

அப்படி அவர்கள் செய்யும்போது ஏழை மக்களுக்கு நிச்சயமாக பணம் கிடைக்காது. ஆகையினால் அதிகமான கன்டிஷன் போடாமல், இருக்கின்றவர்களை தொழில் நடத்தவிடுங்கள். அதிகமான அதிகாரங்களை தாசில்தாருக்குக் கொடுத்தால் ஒரு தாசில்தார் எப்படி லைசன்ஸ் கொடுப்பார் என்று எங்களுக்குத் தெரியும். நாங்கள் எல்லாம் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்கள். ஒரு புரபஷனல் லைசன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்கப் போனால், ஆயிரம் டெலிபோன் நாங்கள் பண்ணினாலுங்கூட அவர்கள் மாமூல் வாங்கிக்கொண்டுதான் கொடுக்கிறார்கள். இந்தத் தொழிலை எல்லாம் அரசாங்கத்திலே செய்ய முடியாது. இஸ்யூயிங் அத்தாரிட்டி தாசில்தார். எந்த அரசாங்கம் வந்தாலும் அவர்கள். திருந்திவிடுவார்கள் என்று நான் சொல்ல தயாராக இல்லை. இந்த அரசை குறை சொல்வதற்காக அல்ல. யார் ஆண்டாலும் கீழே இருக்கிற இத்தகைய அதிகாரிகள் செய்வார்கள் ஆகையினால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல. எண்ணத்திலே கொண்டு வந்தாலுங்கூட இத்தகைய சட்டதிட்டம் வரும்போது, இங்கிலீஷ், தமிழில் எழுதவேண்டுமென்று இருந்தாலும், அவன் இந்தியில் எழுதி இருந்தால் உடனே அவனை அதிகமாக சார்ஜ் பண்ணுவார்கள். லைசன்ஸை கேன்சல் பண்ணுவார்கள். என்ன செய்ய முடியும்? நமக்கே தெரியும் அவன் நோக்கம் இந்தியில் தான் இருக்கிறது. வட மாநிலத்துக்காரர்கள் தான் அதிகமாக பணம் கொடுக்கிறார்கள். ஆகையினால் இந்த மாதிரி கிளாஸ்கள் தேவையில்லை. தமிழ்நாட்டில் அக்கிரிகல்சரல் லோன் கூட அவர்கள்தான் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். வேண்டுமானால், அரசாங்கமே இத்தகைய லைசன்ஸ் கொடுக்க கோவாபரேட்டிவ் செக்டாரில் கொஞ்சம் பணத்தை போட்டு அதிகாரிகளை வைக்கலாம்; பான் புரோக்கர் என்று சொல்லி அதிகாரிகளை நியமித்து வைத்துக்கொண்டால் இந்த சட்டங்கள் எல்லாம் சரியாக இருக்கும். ஆகையினால் இந்த சட்டத்தினால் ஏழை எளிய மக்கள் பாதிக்கக் கூடாது. பான் புரோக்கர்களை கட்டுப்படுத்த வேண்டும். ஏற்கெனவே அவர்கள் மீது பல டாக்ஸ் போட்டு இருக்கிறோம். ஆகையினால் இந்த சட்டம், தேவையில்லை, இருக்கிற சட்டமே போதும் என்று சொல்லி இந்த சட்டத்தை வாபஸ் செய்ய வேண்டுமென்று கேட்டு அமருகிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-20

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக மிக சாமானியமான, எளிய மக்களுக்கு ஒரு வசதி செய்து கொடுக்கிற, அடகு பிடிப்போர் சம்பந்தமான, ஒரு முக்கியமான, தேவையான, அவசியமான திருத்தத்தை இந்த மாமன்றத்தில் தமிழக அரசு இன்றைக்கு கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சட்டம் 1943 ஆம் ஆண்டு

தொடங்கப்பட்டது. பிறகு சிறு சிறு திருத்தங்கள் கொண்டு வந்து 50 ஆண்டுகளாக இந்த அடகு வைக்கும் தொழில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைய தினம் நடைமுறையில், அனுபவத்தில் பல குறைபாடுகளும் முறைகேடுகளும் கண்ட காரணத்தினால் அவைகளை எல்லாம் நீக்கி, இந்தச் சட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல 'பான் புரோக்கர்ஸ்' அடகு கடை வைப்பவர்கள், 'பாரோயர்ஸ்' அடகு வைப்பவர்கள் இந்த இரண்டு நிலையினருடைய நிலையை மனதில் கொண்டு இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

தமிழகத்தில் இன்றைக்கு சுமார் 20,000 பேர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த 20,000 அடகு கடைக்காரர்களிடத்தில் ஏறத்தாழ சுமார் 20 இலட்சம் பேர்கள் 'பாரோயர்ஸ்'—'பாரோயர்ஸ்' என்றால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல பெரிய தொழிலதிபதிகளோ வணிகவேந்தர்களோ, மிட்டாக்களோ, மிராசுகளோ, இந்த அடகு கடைக்குச் செல்வதில்லை. இன்றைக்கு சென்னையைப் பொறுத்தவரையில் எனக்கு சில அனுபவங்கள் உண்டு. அதுவும் ஆயிரம் விளக்கு பகுதியைப் பொறுத்தவரையில் சில அனுபவங்கள் உண்டு. அடகு கடைகள் எங்கே இருக்கின்றன என்றால், எங்கு குடிசைவாசிகள் இருக்கிறார்களோ, எங்கே 'ஸ்லம்ஸ்' இருக்கின்றனவோ, எங்கே சாதாரண வேலைகளை செய்துகொண்டு 100 ரூபாய் வேண்டும் 200 ரூபாய் உடனடியாக வேண்டுமென்றால் தன்னிடத்தில் இருக்கிற ஆடைகளையோ, தன்னிடத்தில் இருக்கிற சிறிய நகைப் பொருள்களையோ, தன்னிடத்தில் இருக்கிற பண்ட பாத்திரங்களையோ, இவைகளை எல்லாம் 'ப்ளட்ஜ்' செய்து வாங்குகிற ஒரு முறை தானே தவிர வேறல்ல. அதில் பல முறை கேடுகள் இருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அதை ஒரு சீரமைப்புச் செய்து, தொழிலும் நசியாமல் இன்றைக்கு ஏறத்தாழ 20 இலட்சம் பேர்கள் மிகச் சாமானியமானவர்கள் 100 ரூபாய், 200 ரூபாய், 500 ரூபாய் உடனடியாக அப்போதே வாங்குவது. அதிலுள்ள சிக்கல்களை எல்லாம் நீங்கள் அறிவீர்கள். அவர்கள் சொன்னார்கள் மொழிப் பிரச்சினை என்று. இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். இதில் பெரும்பகுதியினர் வட நாட்டிலிருந்து வந்திருப்பவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று. ஒரு உணர்வை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் வடபுலத்திலிருந்து வந்தவர்கள் தான். குஜராத்திலிருந்தும், இராஜஸ்தானிலிருந்தும் வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இந்த மண்ணில் ஒரு நான்கு தலைமுறைகளாக இருக்கிறார்கள். தமிழர்களாகவே மாறி விட்டார்கள். அவர்கள் வீட்டில் பேசுவது தமிழ். குடியிருப்பது தமிழ் தெருவில். அவர்கள் குஜராத்தையும் மறந்து விட்டார்கள். அவர்கள் பிறந்த பாட்னாவையும் மறந்து விட்டார்கள், பீகாரையும் மறந்து விட்டார்கள். சுத்தத் தமிழில்

1993 அக்டோபர் 28] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

பேச அவர்களுக்கு மொழி மிகத் தெளிவாகத் தெரியும். இன்றைக்கு என்னோடு வந்தால் ஆயிரம் விளக்கு பகுதியில் அம்மையப்பன் தெருவில் பார்த்தால் அங்கே இருப்பவர்கள், அடகு கடைக்காரர்கள் சுத்தத் தமிழ். ஆயிரம் விளக்குப் பகுதியில் அஜீஸ் முல்க் தெருவுக்கு சென்றால் சுத்தத் தமிழ். நான்கு தலைமுறைகளாக, ஐந்து தலைமுறைகளாக இருக்கிறார்கள். ஆகவே மொழிப் பிரச்சினை இல்லை.

பிற்பகல் 12-25

சட்டப்படி இன்றைக்கு 'பான் டிக்கட்ஸ்' கொடுக்கிறார்கள். 200 ரூபாய்க்கு ஒரு பாத்திரத்தை வைத்து, ரசீது கொடுக்கிற போது, அவன் இந்தியில் கொடுத்தால், அல்லது அவனுக்குத் தெரியாத மொழியில் கொடுத்தால், வாங்குகிறவர்களுக்கு என்ன உத்தரவாதம். எனவேதான் ஆங்கிலம் அல்லது வட்டார மொழி. தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒன்று தமிழ். பெரும்பான்மையாக மக்கள் பேசுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரைச் சேர்ந்த கன்னியாகுமரி, அங்கே மலையாளம். சில எல்லைப் பகுதிகளிலே மலையாளம். அதைப்போல, பெங்களூருக்குப் பக்கத்திலே, ஹோசுருக்குப் பக்கத்திலே கன்னடம். அதைப்போல, சித்தூர், வேலூர் போன்ற பகுதிகளுக்குப் பக்கத்திலே தெலுங்கு என்று அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள், பார்டர் ஏரியாவிலே இருக்கிறார்கள். அவர்களுக்காக, ஆங்கிலம் அல்லது அந்த வட்டாரத்திலே இருக்கிற, தமிழோ, தெலுங்கோ, மலையாளமோ, கன்னடமோ, இவைகளில் ரசீது கொடுத்தால், அதன் மூலம் வாங்குகிறவர்களுக்கு எவ்வளவு ரூபாய் வாங்கினோம், எப்போது திருப்பிக் கொடுக்கவேண்டும் என்ற அந்த நியாய உணர்ச்சியைச் செலுத்துவதற்காகத்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. இந்த பான் புரோக்கர்களுக்கு இந்தி மொழி தெரியும். ஆங்கிலமும் தெரியும், தமிழும் தெரியும். ஹோசுரிலே வியாபாரம் செய்தால், அவனுக்கு கன்னடம் தெரியும். சித்தூருக்குப் பக்கத்திலே இருந்தால், தெலுங்கு தெரியும். வேலூருக்குப் பக்கத்திலே இருந்தால் தெலுங்கு தெரியும். எனவே இது ஒரு பிரச்சினை அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்கனவே சொன்னதைப்போல, இதைச் சீரமைத்து, அதன்மூலம் மிகமிக சாமானியமான மக்களுக்கு ஒரு உத்தரவாதத்தைக் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பாக சில அடகுக் கடைக்காரர்கள் 200 ரூபாய் பெறுமானமுள்ள ஒரு சாமானை வைக்கிற போது, 100 ரூபாய் என்று எழுதுகிறார்கள். 'கன்சீல்' செய்கிறார்கள். சில நேரத்திலே 200 ரூபாயையும் கொடுத்து விட்டு நான்கு நாட்களில் ஓடிவிடுகிறார்கள். 'அப்ஸ்கான்டிங்'. எனவே, இவைகள் எல்லாம் பரவலாக நம்முடைய கவனத்திற்கு

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1993 அக்டோபர் 28

வந்திருக்கின்றன. 'கன்சீலிங் அன்ட் அப்ஸ்கான்டிங்'. இப்படிப் பட்டவர்களுக்கு பெனால்டி போடக்கூடாது. பனிஷ்மென்ட், 2 ஆண்டு சிறையாவது கொடுத்தால் தான் மற்றவர்களுக்கு எல்லாம் எச்சரிக்கையாக இருக்கும் என்பதால், ஒரு எக்ஸ்ட்ரீம் ஸ்டெப் ஆகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தன்னுடைய பொருட்களையே எடுத்துக் கொண்டு ஓடுகிறான். அவனுக்கு ஒரு அச்சத்தை உண்டாக்கவேண்டும். அதன் மூலம் ஒரு சுமுக மான சூழ்நிலையை உண்டாக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த பெனால்டி, பனிஷ்மென்ட், இவைகளை எல்லாம் இந்த மசோதாவிலே சொல்லி இருக்கிறோம். This is a beneficial Act. 20 லட்சம் சாமானியர்களுக்காக, குடிசையிலே இருப்பவர்களுக் காக நடைபாதையிலே இருப்பவர்களுக்காக, ரிக்ஷா ஓட்டிக் கொண்டிருக்கிற தொழிலாளிகளுக்காக, இப்படிப்பட்ட, மிகமிக சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிற, இவர்களுக்காக கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம். It is a progressive and beneficial Act. இந்த மசோதாவை நல்ல முற்போக்கு எண்ணம் கொண்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், இந்தச் சபையும் அங்கீகரித்து, நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படு கிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 14 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்;

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவை யின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்;

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுபிடிப்போர் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1993) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன் ;

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்ட முன் வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/ 1993), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.